பக்கங்கள் : நான்கு

உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 தை 13 சனிக்கிழமை (27.01.2007)UTHAYAN-A Lively National Tamil Dailyகதிர் : 63

அரசு - எதிரணிப் பிரமுகர்கள்

ஏக காலத்தில் புதுடில்லிக்கு!

பிரதமர், ரணில், கொஹன்ன அடுத்த வாரம் அங்கு விஜயம்

கொழும்பு, ஜனவரி 27

இலங்கையில் மீண்டும் அமைதியை ஏற்படுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்று இந்தியாவும், ஏனைய உலக நாடுகளும் அதிகம் விசனம் கொண்டுள்ள இத்தருணத்தில் இலங்கை அரசியலின் முக்கிய பிரமுகர்கள் அடுத்த வாரத்தில் இந்தியத் தலைநகர் புதுடில்லிக்கு விஜயம் செய்யவிருக்கின்றனர்.

பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, வெளிவிவகார அமைச்சின் புதிய செயலாளரும், இலங்கை அரசின் சமாதானச் செயலகத்தின் பணிப்பாளருமான பாலித கொஹன்னவுமே அடுத்த வாரத்தில் புதுடில்லிக்குப் படையெடுக்கவிருக்கின்றார்கள்.

மகாத்மா காந்தியின் சத்தியாக்கிரகப் போராட்டத்தின் நூற்றாண்டு நிறைவையொட்டி ஆளும் காங்கிரஸ் கட்சி ஏற்பாடு செய்துள்ள நிகழ்வுகளில் பங்குபற்றவே இலங்கைப் பிரதமரும், எதிர்க்கட்சித் தலைவரும் புதுடில்லி செல்கின்றார்கள்.

எனினும், அகிம்சை வழிப் போராட்டத்தை முன்னெடுத்த மகாத்மா காந்தி பற்றிய புகழஞ்சலிகளை இந்த நிகழ்வுகளில் செவிமடுக்கும் இவ்விரு இலங்கைத் தலைவர்களும், இலங்கையில் வன்முறைப் புயல் வீசுவதால் ஏற்பட்டுள்ள அவலநிலை குறித்தும் புதுடில்லியில் தலைவர்களுடன் விரிவான பேச்சுகளில் ஈடுபடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இராணுவ ரீதியில் புலிகளை அடக்கியேதீருவதுஎன்று இலங்கை

(03ஆம் பக்கம் பார்க்க)

நிர்ணயிக்கப்பட்டதைவிட அதிக விலைக்கு விற்ற ஐந்து வர்த்தகர்கள் நேற்று நீதிமன்றில் ஆஜர்

பொருள்கள் பறிமுதல்; 10 ஆயிரம் ரூபா அபராதம்

யாழ்ப்பாணம், ஜன.27

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு உட்பட்ட பகுதியில், அரச அதிபரால் நிர்ணயிக்கப்பட்ட விலையை விட கூடுதல் விலைக்கு அத்தியாவசியப் பொருள்களை விற்பனை செய்த ஐந்து வர்த்தகர்கள் விலைக் கட்டுப்பாட்டு அதிகாரிகளிடம் சிக்கினர்.

இந்த வர்த்தகர்கள் அரிசி, பருப்பு போன்ற அத்தியாவசியப் பொருள்களை நிர்ணயிக்கப்பட்ட விலைகளை விட கூடுதல் விலைக்கு விற்பனை செய்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் யாழ். நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்டனர்.

இவர்களை விசாரணை செய்த யாழ். நீதிவான் இ.த.விக்னராஜா, தலா 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன், கூடுதல் விலைக்கு விற்பனை செய்யப்பட்ட பொருள்களைப் பறிமுதல் செய்து பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கும்படி யாழ். அரச அதிபருக்கு உத்தரவிட்டார். (அ-1)

குடாநாடு முழுவதும் இன்று 8 மணிநேரம் மின்வெட்டு

யாழ்ப்பாணம்,ஜன.27

குடாநாடு முழுவதும் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 4.30 மணிவரை மின்சார விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று இலங்கை மின்சார சபையின் யாழ். பிரதேச அலுவலகத்தினர் அறிவித்தல் விடுத்துள்ளனர்.

அவசர திருத்தவேலைகள் மேற்கொள்ளப்படவிருப்பதால் மின் தடை நடைமுறைப்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (1-203)

அனல் மின் நிலையம் நிறுவும் ஏற்பாடு; இந்தியக் குழு திருமலை சென்று ஆய்வு

கொழும்பு, ஜன. 27

சம்பூர் அனல்மின் திட்டத்தை முன்னெடுத்துச் செல்வது தொடர்பாக நேற்று முன்தினம் இந்தியக் குழுவொன்று திருமலை சென்று ஆய்வு நடத்தியது. இத்திட்டத்திற்கென மூதூர் கிழக்கு மற்றும் மேற்குப் பகுதிகளில் ஐந்நூறு ஏக்கர் நிலத்தை ஒதுக்க அரசு தீர்மானித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஐந்நூறு ஏக்கர் நிலம் அங்கிருந்து இடம்பெயர்ந்த தமிழ் மக்களுக்குச் சொந்தமானது என்றும் இந்த நிலச்சுவீகரிப்பால் இந்த இடங்களில் உள்ள அறுநூற்றுக்கும் மேற்பட்ட குடியிருப்புகள் அப்புறப்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதன் மூலம் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள்தமது சொந்த இடங்களை நிரந்தரமாக இழப்பர் என்றும் தெரியவருகிறது.

பாதிக்கப்படும் இம்மக்களை வேறொரு இடத்தில் குடியமர்த்த அரசு முயற்சிகளை மேற்கொள்ளும் என்றும் கூறப்படுகிறது.

இது தொடர்பாகக் கருத்துக்கூறிய தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட எம்.பி. துரைரட்ண சிங்கம், அரசு முன்னெடுத்துச் செல்லத் திட்டமிட்டிருக்கும் அனல் மின் திட்டத்தால் சம்பூர் மக்கள் அதிக அசௌகரியங்களை எதிர்நோக்கவுள்ளனர்.

இம் மின்நிலையத்தை அமைக்க மூதூர் கிழக்கிலும் மேற்கிலும் 500 ஏக்கர் நிலத்தை அரசு வளைத்துப் போடத்திட்டமிட்டுள்ளது. இது மக்களின் குடியிருப்புப் பகுதி. 600இற்கும் மேற்பட்ட வீடுகள் இல்லாமல் போகும்.- என்றார். (ஐ - 7)

கிண்ணியா நகரசபையின் தமிழ் உறுப்பினர் படுகொலை!

கொழும்பு, ஜன. 27

திருகோணமலை மாவட்டம் கிண்ணியா நகரசபைக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் தெரிவாகிய - ஒரேயொரு தமிழ் உறுப்பினரான - தங்கராஜா இதயராஜா நேற்று ஆயுதபாணிகளால் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்.

தனது சொந்தக் கிராமமான ஆலங்கேணியில் இருந்து தனது நண்பர் ஒரு ஒருவருடன் கிண்ணியா நோக்கி மோட் டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த சமயம் வழியில் அடையாளம் தெரியாத ஆயுதபாணிகளால் இவர்சுட்டுக்கொல்லப்பட்டிருக்கிறார்.

இந்தச் சூட்டுச் சம்பவத்தில் அவரது நண்பர் காயங்களுக்கு உள்ளானார்.

.மோட்டார் சைக்கிளில் பயணித்த நகரசபை உறுப்பினரும் அவரது நண்பரும் வழியில் கடை ஒன்றின் அருகே தரித்து நின்ற சமயம் மோட்டார் சைக்கிள் ஒன்றில் திடீரென அங்கு வந்த ஆயுதபாணிகள் அவரைச் சுட்டுவிட்டுத் தப்பிவிட்டனர் என்று கூறப்படுகிறது.

நகரசபை உறுப்பினர் இதயராஜா இரு பிள்ளைகளின் தந்தை ஆவார்.

நேற்று முற்பகல் 10.30 மணியளவில் இடம்பெற்ற இந்தப் படுகொலை குறித்து இலங்கைத் தமிழரசுக் கட்சி கடும் கண்டனம் தெரிவித்திருக்கிறது. (ஐ)

முருங்கன் பகுதியில் தாக்குதல் பயணி ஒருவரும் 2 படையினரும் பலி!

கொழும்பு, ஜன. 27

மன்னார் முருங்கன் பிரதேசத்தில் பொலிஸாரையும் இராணுவத்தினரையும் இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் பஸ் பயணி உட்பட மூவர் கொல்லப்பட்டனர். நால்வர் காயமடைந்தனர் என்று பாதுகாப்பு ஊடக தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

நேற்றுக்காலை 8.10 மணியளவில் பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து வீதி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தவேளை விடுதலைப் புலிகள் இத்தாக்குதலை மேற்கொண்டனர் என்றும் -

அச்சமயம் வீதி வழியே வந்த தனியார் பயணிகள் பஸ் ஒன்றின் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் தகவல் நிலையம்

(04ஆம் பக்கம் பார்க்க)

கரடியனாறு பகுதியிலிருந்தும் மக்கள் இடம்பெயர்கின்றனர்

செங்கலடி, ஜன. 27

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப்புலிகளின் மற்றுமொரு கட்டுப்பாட்டுப் பிரதேசமான கரடியனாறு பகுதியிலிருந்தும் பெரும் எண்ணிக்கையான பொதுமக்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை நோக்கி இடம்பெயரத் தொடங்கியுள்ளனர்.

வாகரைப் பிரதேசத்தை இராணுவம் முற்றாகக் கைப்பற்றியதைத் தொடர்ந்து கரடியனாறு மற்றும் அதனை அண்மித்த பகுதிகளிலும் புலிகளுக்கும், இராணுவத்தினருக்குமிடையில் மோதல்கள் நடைபெறக்கூடும் - என்று அஞ்சியே மக்கள் இடம்பெயர்கின்றனர்.

இடம்பெயரும் மக்கள் அங்கிருந்து செங்கலடிப் பிரதேசத்திற்கு காட்டு வழியாகவே வருகின்றனர். தற்போது தமது உறவினர், நண்பர்களின் வீடுகளில் தங்கியுள்ளனர். இவர்களில் பலர் ஏற்கனவே வாகரை அகதிகள் தங்கியுள்ள ஏறாவூர் மணியபுரம் நலன்புரி முகாமிலும் தஞ்சமடைந்துள்ளனர். இறுதிக் கணக்கெடுப்பின்படி மட்டக்களப்பு மாவட்டத்தில் இதுவரை 16 ஆயிரத்து 858 குடும்பங்களிலிருந்து 60 ஆயிரத்து 45 பேர் இடம்பெயர்ந்திருப்பதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் வெளியிட்டிருக்கும் தகவலில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

குடாநாட்டு மக்களின் சுதந்திரமான நடமாட்டம் பெரிதும் தடைப்பட்டுள்ளது

யாழ். மாவட்ட இணையத்தின் அறிக்கையில் விவரிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.27

தற்போதுள்ள அசாதாரண சூழ்நிலை மற்றும் பாதுகாப்புக் கெடுபிடிகள், கடும் சோதனை நடவடிக்கைகள் காரணமாகக் குடாநாட்டு மக்களின் சுதந்திரமான நடமாட்டம் பெருமளவில் தடைப்பட்டுள்ளதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் வெளியிட்டுள்ள டிசெம்பர்மாதத்துக்கான அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டு மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக அதில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கும் சோதனை நடவடிக்கைகள் காரணமாக மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனால், அவர்கள் சுதந்திரமாகப் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது.

பாடசாலை மாணவர்கள் உட்பட அனைவரும் கடுமையான உடற் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர். பஸ்களில் பயணம் செய்வோர் இறக்கப்பட்டு சோதனைக்குட்படுத்தப்படுகின்றனர். இதன் காரணமாக மக்களின் அன்றாட நடவடிக்கைகள் பல பாதிக்கப்படுகின்றன.

உணவு நிலையில் முன்னேற்றம் இல்லை

குடாநாட்டு மக்களின் உணவு நிலையில் பெரிதாக ஏதும் முன்னேற்றம் இல்லை அரிசி, மா, சீனி, பருப்பு போன்ற அத்தியா

(04ஆம் பக்கம் பார்க்க)

நீதிபதிகளின் வாசஸ்தலங்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு

யாழ்ப்பாணம்,ஜன.27

யாழ். மாநகரப் பகுதியில் வாசஸ்தலங்களைக் கொண்ட மல்லாகம், சாவகச்சேரி நீதிபதிகளுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாட்டை உதவிப் பொலிஸ் சுப்பிரின்டென்ட் ஏரிக் பெரேரா எடுத்துள்ளார்.

நல்லூர், செட்டித்தெருவில் உள்ள சாவகச்சேரி நீதிவான் அ.பிரேம்சங்கரின் வாசஸ்தலத்தில் மேற்கொள்ளப்பட்ட திருட்டு முயற்சியை அடுத்து அவர் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளார்.

யாழ்ப்பாணம், பருத்தித்துறை நீதிவான்களின் யாழ். வாசஸ்தலங்களுக்கு ஏற்கனவே பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (அ-1)

யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை
வருடாந்த பரிசளிப்பு விழா - 2006

காலம் : நாளை (28.01.2007) ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 9.30 மணி
இடம் : கல்லூரி மண்டபம்
தலைவர் : திரு. சு. புண்ணியசீலன் (அதிபர்)
பிரதம விருந்தினர் : பேராசிரியர் அ. சண்முகதாஸ்
(இயக்குநர், ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம் - யாழ். பல்கலைக்கழகம்)
சிறப்பு விருந்தினர் : திரு. ச. கைலாசநாதன்
(உதவிக் கல்விப் பணிப்பாளர், தெல்லிப்பழைக் கோட்டம்)
பரிசில் வழங்குபவர் : திருமதி மனோன்மணி சண்முகதாஸ்
(முன்னாள் விருந்துநிலை விரிவுரையாளர், டோக்கியோ பல்கலைக்கழகம், ஜப்பான்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- 2006 இல் பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களும், பழைய மாணவர்களும் இதனைத் தனிப்பட்ட அழைப்பாகக் கருதி வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வாழ்த்துகின்றோம்

இப்பரிசில் தினத்தில் கல்வித்துறையிலும், இணைந்த பாடச் செயற்பாட்டிலும் சாதனைகள் புரிந்த மாணவர்கள், ஆசிரியர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

- இப்பரிசு ஆண்டில் பொறியியல்துறைக்கு மூவர் உட்பட 26 பேர் பல்கலைக்கழக அனுமதி பெற்றமை
- க.பொ.த. (சா/த) பரீட்சையில் 90.3 வீதமான மாணவர்கள் க.பொ.த. (உ/த) தகுதி பெற்றமை.
- 2006 இல் ஆண்டு 9 இல் மாகாண மட்டப் பரீட்சையில் 100 வீதம் மாணவர்களும் சித்திபெற்றமை.
- மாகாண மட்ட மெய்வல்லுநர் போட்டிகளில் 2 முதலாம் இடங்களையும், ஓர் இரண்டாம் இடத்தையும் பெற்றமை.
- மாவட்ட மட்ட தமிழ்த்தினப் போட்டியில் 3 முதலாம் இடங்கள், 2 இரண்டாம் இடங்கள், ஒரு மூன்றாம் இடம் பெற்றமை.
- வலைப்பந்தாட்டத்தில் வடகிழக்கு மாகாணத்தில் தொடர்ந்து ஒன்பது வருடங்கள் வெற்றிக்கிண்ணத்தைப் பெற்றதுடன் இவ்வருடம் 19,17 வயது பிரிவுகள் முதலாம் இடத்தைப் பெற்றதுடன், சிறப்பாக 19 வயது பிரிவினர் தொடர்ந்து 3 வருடங்கள் வெற்றிக் கிண்ணம் பெற்றமை.

தொடர்ந்தும் வெற்றிகள் பல பெற்றிட வாழ்த்துகின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
யூனியன் கல்லூரி - தெல்லிப்பழை.

(57488)

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்
முயற்சி திறன் விருத்தி மையம்

T.R.R.O

புதிய பயிற்சி நெறிகள் ஆரம்பம்

காலம்:- 3 மாதங்கள்

பயிற்சி நெறிகள்	தகைமைகள்	பயிற்சிகள் நடைபெறும் இடம்
கணினி தட்டச்சு	ஜீ.சீ.ஈ சாதாரணதரம் சித்தியடைந்திருத்தல் வேண்டும்	யாழ்ப்பாணம் (வார இறுதி நாட்கள்)
மின்சார தொழில் நுட்பம் (A.C. Wiring)	ஜீ.சீ.ஈ சாதாரணதரம் வரை கற்றிருத்தல் வேண்டும்	யாழ்ப்பாணம் இணுவில் (வார, வார இறுதி நாட்கள்)
புத்தகம் கட்டுதல்	ஜீ.சீ.ஈ சாதாரணதரம் வரை கற்றிருத்தல் வேண்டும்	யாழ்ப்பாணம் இணுவில் (வார, வார இறுதி நாட்கள்)
உடையமைத்தல் சாரி பிளவுஸ் (3 வகைகள்) பஞ்சாபி பிஜமா (2 வகைகள்) Fabric Painting	ஜீ.சீ.ஈ சாதாரணதரம் வரை கற்றிருத்தல் வேண்டும்	யாழ்ப்பாணம் இணுவில், கைதடி (வாரநாட்கள்)

- பதிவுக் கட்டணம் மட்டும் அறவிடப்படும் -

விண்ணப்பப் படிவங்களை சுயமாகத் தயாரித்து 05.02.2007ம் திகதிக்கு முன்பு அனுப்பி வைக்கவும்

விண்ணப்பப் படிவங்களை அனுப்பி வைக்கப்படவேண்டிய முகவரி:

தலைவர்,
அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்,
106, 4ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

[illegible]

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

நயினாதீவு இல்லறஞானி,
சித்தமருத்துவ கலாநிதி

அமரர் தம்பையா சோமசேகரம்

தோற்றம் 26.08.1918 — மறைவு: 08.02.2006

அவர்களின் ஞாபகார்த்த திருவுருவச்சிலை திரைநீக்கலும், முதலாம் ஆண்டு ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நாளை (28.01.2007) ஞாயிற்றுகிழமை இடம்பெறும்.

"கற்பகச்சோலை"
5ஆம் வட்டாரம் நயினாதீவு.

(57209)

- குடும்பத்தினர்.

விண்ணக வாழ்வின்
45ஆம் நாள் நினைவு அஞ்சலி

அமரர்

நாகலிங்கம் ஜெயேந்திரன்

அன்னை மடியில் 02.06.1965 — இறைவன் அணைப்பில் 14.12.2006

"ஆண்டவரே நீரே என் அடைக்கலம்
உயிர் வாழ்வோர் நாட்டில் நீரே என் பங்கு"

அன்னாரின் ஆத்மசாந்திக்காக அருட்தந்தை யூட் அமலதாஸ் அடிகளார் அவர்களால் புனித லிகோரியார் தேவாலயத்தில் இன்று (27.01.2007) சனிக்கிழமை காலை 7 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

(8/51861)

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்.

ஞானோதய அக்கடமி

சங்கத்தானை
சாவகச்சேரி.

எமது கல்வி நிலையத்தின் அனைத்து வகுப்புகளும் நாளை (28.01.2007) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

ஆசிரியர்கள்.

வீடு வாடகைக்கு

பழைய பூங்கா வீதி, சுண்டுக்குளியில் 3 அறைகள், 2 கோல், சமயல் அறை, சாப்பாட்டு அறை, குளியல் அறை என்பவற்றுடன் அமைந்த வீடு உடன் வாடகைக்கு கொடுக்கப்படும்.

தொடர்பு :
T.P:021 222 5539

கிராம உத்தியோகத்தர் பரீட்சை வகுப்புகள்

D.M.I	ஞாயிறு 11 - 2 மணி வரை (ஏனைய நேர விவரம் வகுப்பில்)
SUBRA சித்தன்கேணி	திங்கள், புதன், வெள்ளி 4.30 - 6 மணி வரை

விற்பனைக்கு

- லான்மாஸ்ரர் (குறுகிய காலம் பாவித்தது)
- ஜெனரேற்றர்
- நீர் இறைக்கும் இயந்திரம்
- தார்சீற், வளை, கைமரங்கள், சிலாகைகள்

தொடர்பு: 077 9905269, 077 9360553
(இயன்றவரை சனி, ஞாயிறு நாள்களில் தொடர்புகொள்ளவும்)

(57481)

வேலைக்கு ஆள் தேவை

பதவி : உற்பத்தி அபிவிருத்தியாளர்களும், உதவியாளர்களும்
தகைமை : B.Sc., G.C.E. A/L விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களில் சித்தி

அனுபவச்சான்றிதழ்களை இணைத்து எதிர்வரும் 09.02.2007 இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

சர்வதேச உயிர்நுட்பு,
131/2, பலாலி வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம். தொ.பே.: 4590907.

(57475)

விற்பனைக்கு

அளவெட்டி வடக்கு பிரதான வீதியில் 4 ¾ பரப்புக்காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 011 4949234

COMPUTER EXPRESS

Head Office : No 15, Sirambiyadi Lane, (off Stanly Rd).
Branch : No 167, Kasthuriyar Road, Jaffna

ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்

- Diploma in Hardware Engineering
- Diploma in Video Mixing
- Diploma in Graphic Designing
- Diploma in Computerized Accounting

ஒரேநாளில் ஆரம்பம் : 29/01/2007

---

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னம் இராமன்

தோற்றம் 11.01.1926
மறைவு 28.12.2006

இன்று (27.01.2007) சனிக்கிழமை நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் மதியபோசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம்.

நாவலடி,
உடுப்பிட்டி.

இவரின் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

மரண அறிவித்தல்

அம்பிகானந்தன் சகுந்தலாதேவி

கோண்டாவில், நெட்டிலிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட அம்பிகானந்தன் சகுந்தலாதேவி இந்தியா திருச்சியில் 25.01.2007 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அம்பிகானந்தனின் (உரும்பிராய்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற முன்னாள் கொக்குவில் கிராம சபைத் தலைவர் சி.க.சபாபதி - கனகலச்சுமி தம்பதியரின் அன்பு மகளும் குமணன், ராகவன், நிவேதித்தா, உமாசங்கர்(லண்டன்) ஆகியோரின் அருமைத் தாயாரும் சற்குணதேவி (நோர்வே), ராஜ்குமார் (லண்டன்), சாரதாதேவி(ஆஸ்திரேலியா), சாந்தகுமார்(லண்டன்), சுசிலாதேவி (லண்டன்), சபாநந்தி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.01.2007) சனிக்கிழமை திருச்சியில் நடைபெறும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நெட்டிலிப்பாய், [illegible]
கோண்டாவில். (தான்)

ST. JOHN'S COLLEGE, JAFFNA
VACANCIES FOR TEACHERS

Applications are invited from suitable applicants to teach **Logic & Scientific Method** (Advanced Level) and **Agriculture** (Grade 6-Advanced Level). The last date for receiving applications is **8th February 2007.** English, Sports & IT Skills will be considered as an advantage. Apply with full bio-data and photocopies of certificates - Diploma/Degrees to:

The Principal
St. John's College,
Jaffna.

இரண்டாம் வருட நினைவு

சங்குவேலியைப் பிறப்பிடமாகவும் ஏழாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

சின்னத்துரை மகாலிங்கம்

(தொழில் நுட்பக் கல்லூரி-பிரதம எழுதுனர், கௌரவ செயலாளர் ஊழியர் ஐக்கிய நாணயச்சங்கம், கோக்குவில்)

மலர்வு 09.06.1949 — உதிர்வு 18.01.2005

திதி:27.01.2007

அன்பு காட்டி அறிவு ஊட்டி
இன்பமுடன் நாம் வாழ
இனிய வழிகாட்டிய எம் தெய்வமே!
ஆண்டுகள் பல கடந்தாலும்
ஆறாது உங்கள் நினைவலைகள்.......
கலையாத நினைவுகளுடன் உங்கள்
ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்

ஏழாலை மேற்கு,
ஏழாலை

குடும்பத்தினர்

31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர் வல்லிபுரம் சிங்கராஜா

மலர்வு 28.03.1938 — உதிர்வு 29.12.2006

29.12.2006 அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் பிரிவின் போது ஆறுதல் கூறியோருக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதுடன் நாளை (28.01.2007) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இதையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.)

'வசந்த வாசம்',
ஆடியபாதம் வீதி, கொக்குவில் சந்தி,
(மாவிட்டபுரம்)

(57386)

குடும்பத்தினர்.

31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

பிறப்பு	இறப்பு
03 . 08 . 1958	28 . 12 . 2006

திருமதி ஜெகதீஸ்வரி இராமச்சந்திரன்

இடையிலே விடை பெற்று எங்கு சென்றாய் - எம்
இதயத்தை ஈட்டியால் ஏன் நீ கொன்றாய்
விடையின்றி திகைத்து இடர்பட்டு நாமோ
விழுந்தோம் விம்மினோம் விழி நீர் போமோ.

அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (27.01.2007) சனிக்கிழமை காலை 5 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளன. இக்கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறவுள்ள மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

ஊரி, திக்கம்,
அல்வாய் மேற்கு.

(57465)

பிரிவால் துயருறும்
கணவர் இ.இராமச்சந்திரன் (ஆசிரியர்),
குடும்பத்தினர்.

மரண அறிவித்தல்

வெற்றிவேலு துரைராசா

(முன்னாள் நிர்வாகச் செயலாளர், துறைமுக அபிவிருத்தி அதிகார சபை)

ஐயனார் கோயிலடி, மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், 'ஸ்ரீநிகேதன்' சுன்னாகத்தை வதிவிடமாகவும் பின்னர் லண்டன் SURREYயில் வாழ்ந்தவருமான வெற்றிவேலு துரைராசா 12.01.2007 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வெற்றிவேலு - செல்லாச்சி தம்பதியரின் மகனும், செல்லையா - சௌந்தரம் தம்பதியரின் மருமகனும் கமலநாயகியின் அன்புக் கணவரும் ஸ்ரீகௌரி, ஸ்ரீரவீந்திரன், ஸ்ரீரவிச்சந்திரன், ஸ்ரீரவிச்செல்வன், ஸ்ரீரவிசங்கர் ஆகியோரின் அன்புத் தந்தையும் விஷ்ணுபாலா, அம்பிகா, சித்திரா, ஜெயந்தி, சுபாஷினி ஆனந்ததேவன், ஸ்ரீதேவி, ரஞ்சித்குமார் ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்ற நாகம்மாவின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற ஆசிரியர் சடாச்சரத்தின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21.01.2007 ஞாயிற்றுக்கிழமை அங்கு நடைபெற்றதென்பதை ஆழ்ந்த துயரத்துடன் அறியத்தருகின்றோம். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'ஸ்ரீநிகேதன்',
டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.

(57552)

தகவல்:
ஸ்ரீதேவி
(றஞ்சி - மருமகள்)

உதயன்
தொ.பே., தொ.ந.: 222 9933, 222 3837 - 222 9944

பேரவல நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கும் மக்கள்

இந்த யுத்த நிறுத்த காலத்தில், யுத்தநிறுத்தத்தைப் பேணுவதாகக் கூறிக்கொண்டே, பெரும் இராணுவ நடவடிக்கை ஒன்றை கிழக்கில் முன்னெடுத்து வெற்றிகரமாக முடித்திருக்கின்றது அரசு. அதுமட்டுமல்ல. அந்த இராணுவ நடவடிக்கை வெற்றியை பெரும் இறுமாப்பு அறிவிப்பாக - பகிரங்கமாக - வெளியிடவும் அரசுத் தலைமை தவறவில்லை.

மாத்தளை மாவட்டத்தில் நீர்த்தேக்கத்திட்டம் ஒன்றை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே நாட்டின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி இந்த வெற்றி மமதை அறிவிப்பை வெளியிட்டார்.

அந்த வெற்றி மிதப்புக்கு மத்தியிலும் தமிழர்களின் உரிமைக்கான போராட்டத்தைப் 'பயங்கரவாதமாக' சித்திரிக்கும் வழமையான சிங்களத் தலைமைகளின் புறணியைத் தாமும் பாட ஜனாதிபதி மஹிந்தர் தவறவில்லை. மேற்படி பயங்கரவாதத்தைத் தோற்கடிக்கும் வலுவான ஆயுதம் அரசியல் தீர்வே என்று தத்துவம் பேசவும் கூட அவர் பின்நிற்கவில்லை.

ஒருபுறம் அரச இராணுவ நடவடிக்கைகளைப் புகழ்ந்து, போற்றி, அதனை ஊக்குவிக்கும் செருக்குப்போக்குத் தொடர, மறுபுறத்தில் அரசியல் தீர்வு பற்றிய அளப்பும் - வாய்வீச்சும் - தென்னிலங்கையில் தொடர்கின்றன.

அதேசமயம், தமிழர் தாயகத்திலோ - அதுவும் அரசுக் கட்டுப்பாட்டில் சிக்கியுள்ள தமிழர் தாயகப் பகுதிகளிலும் - தெற்கில் தமிழர்கள் வாழும் பிரதேசங்களிலும் - 'அரச பயங்கரவாதம்' மோசமாகக் கோலோச்சுகின்றது.

அதிலும், யாழ். குடாநாட்டில் நிலைமை மிகமிக மோசம். பாரிய மனித அவலங்களை அனுபவித்து வரும் யாழ். குடாநாட்டு மக்களுக்கு இயல்பு வாழ்க்கையை உருவாக்க வேண்டியது அவசரமும் அவசியமுமான கட்டாய மாகும். யாழ். மாவட்டப் பொது அமைப்புகள் இதைச் சுட்டிக்காட்டியுள்ளன.

ஆனால், அந்த அமைப்புகளின் மன ஆதங்கம் - விசனம் - உள்ளக்குமுறல் - கூட வெளிப்படுத்தப்படமுடியாத அளவுக்கு நெருக்கடியும், குரல்வளை நசிப்பும் குடாநாட்டில்.

இலங்கையில் ஆள்கள் பலவந்தமாக் காணாமற் போகச் செய்யப்படுகின்ற சிக்கலுக்குப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டமும் அவசரகால விதிகளுமே பிரதான காரணம் என்ற உண்மையை சர்வதேச ஜூரர்களின் ஆணைக்குழு போட்டுடைத்திருப்பதை நேற்று இப்பத்தியில் பார்த்தோம். யாழ். குடாநாட்டிலும் அண்மைக்காலத்தில் மக்கள் பல நூற்றுக்கணக்கில் காணாமற் போனமைக்கு மட்டுமல்ல, அங்கு மக்களின் உள்ளக்குமுறல்கள் வெளிப்படுத்தப்பட முடியாமல் , குரல்வளை நசுக்கப்பட்டு, ஒடுக்கப்படுவதற்கும் கூட இந்தச் சட்டவிதிகளும், அந்தச் சட்ட விதிகளின் கீழ் மேற்கொள்ளப்படும் 'பயங்கரவாத அழுத்தமுமே' காரணமாகும்.

கடந்த ஓகஸ்ட்டிலிருந்து யாழ். குடாநாட்டு மக்கள் அனுபவித்துவரும் மனிதப் பேரவலத்தைத் தீர்த்துவைக்க அரசோ, சர்வதேச சமூகமோ எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

குடாநாட்டுக்கான தரைவழிப்பாதை மூடப்பட்டு, படை முற்றுகைக்குள் மக்கள் சிக்குப்பட்டு, திறந்த வெளிச்சிறையில் வாடுகின்ற இந்த ஆறுமாத காலத்தில் பசி, பஞ்சம், பட்டினி என்பன அங்கு தலைவிரித்தாடுகின்றன. மக்கள் படும் துன்பம் சொல்லி மாளாதவை.

அங்கு இடம்பெறும் ஆள்கடத்தல்கள், வெள்ளைவான் அட்டூழியங்கள், சித்திரவதைகள், துன்புறுத்தல்கள், தினசரிப்படுகொலைகள் என்பன அங்கு - காட்டுத் தர்பார் - கோலோச்சுவதை அம்பலப்படுத்துகின்றன.

தினசரி இரவில் - ஊரடங்கு வேளையில் - ஆயுதக் குழுக்கள் நடத்தும் கொடூரக் கொள்ளைகள் மக்களை அதிர்ச்சிக்குள்ளும், பெரும் பீதி, பயத்துக்குள்ளும் ஆழ்த்தியுள்ளன. இருளத் தொடங்கியதும், நெஞ்சு படபடக்க மக்கள் வீடுகளுக்குள் பயத்தால் முடங்கிக் கிடந்து, தினசரி பயப்பிராந்தியில் செத்துச் செத்துப் பிழைக்கும் திகில் நிலைமை.

நடுநிசியில் ஆயுதங்களுடன் சாவகாசமாக அலையும் கோஷ்டிகளினால் ஒருவாரத்தில் மட்டும் பத்துக்கோடி ரூபாவுக்கு மேலான பணமும், நகையும், பொருள்களும் சூறையாடப்பட்டுள்ளன. இத்தகைய கொடுமைகள் செய்யப்படுகின்றன என்பதை ஊகிக்க முடிந்தும் அதைக்கூட வெளிப்படுத்த முடியாத அச்சுறுத்தல் நிலைமை மக்களுக்கு.

நாளின் பெரும்பகுதி - அரைவாசிப்பகுதி - ஊரடங்கில் கழிகின்றது. அந்த வேளையில்தான் கொடூர அட்டூழியங்களும் தொடர்ந்து அரங்கேறுகின்றன.

நூற்றுக்கணக்கானோர் கடத்தப்பட்டு காணாமற் போயுள்ளனர். திடீர் திடீரென சீருடையிலும், சீருடையின்றியும், வெள்ளைவானில் வருபவர்களினால் கேட்டுக்கேள்வியின்றி ஆயுத முனையில் கடத்தப்படுவோர் - பெரும்பாலும் அவ்வாறு கடத்தப்படுவோர் இளைஞர்களும், மாணவர்களும்தான் - பின்னர் காணாமற் போகின்றனர். சில சமயங்களில் ஆங்காங்கே சுடப்பட்டு சடலங்களாக அவர்கள் வீசப்படுகின்றார்கள்.

பாதைகளை மூடி, மக்களை ஒரு திறந்த வெளிச் சிறைக்குள் சிக்கவைத்துக்கொண்டு, இவ்வாறு அட்டூழிய அடக்கு முறை மூலம் மடக்கி அடிபணிய வைக்கும் அரசியல் தந்திரம் நீண்ட நாளைக்கு பலன்தரும் என்று நம்புதல் ஆகாது. நிலைமை எல்லை மீறும்போது விவகாரம் விபரீதமாகும் சாத்தியம் உண்டு.

தென்னிலங்கை அரசுத்தலைமை அப்படி ஒரு விபரீத நிலைக்கு நிலைமையை நகரவிட்ட பின்னர் ஓடி முழிப்பது, 'குதிரை ஓடிய பின்னர் லாயத்தை மூடிய' கதையாகவே போய் முடியும்.

ஆகவே, சுயாதீனத் தரப்புகள் மூலம் உண்மை நிலையைக் கண்டறிந்து, உத்தமமான முடிவுகளை அரசுத் தலைமை எடுத்து, விரைந்து செயற்படுவது நிலைமையைச் சீராக்க உதவும். சம்பந்தப்பட்டோருக்கு இது சமர்ப்பணம்.

யாழ். பல்கலை உயர்பட்டப் படிப்பு பீடத்தின் கல்விச் செயற்பாடுகள் பெப். 3இல் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜன.27

யாழ். பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீடத்தின் கற்கை நெறிகள் எதிர்வரும் 3ஆம் திகதி தொடக்கம் மீள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இத் தகவலை பட்டப்படிப்புகள் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் க.கந்தசாமி தெரிவித்தார்.

குடாநாட்டின் அசாதாரண சூழ்நிலையால் கடந்த ஓகஸ்ட் மாத முற்பகுதியிலிருந்து உயர் பட்டப்படிப்புகள் பீடத்தின் கற்கைச் செயற்பாடுகள் தடைப்பட்டுள்ளன.

மீளவும் வழமையான நேர அட்டவணைப்படி எதிர்வரும் 3ஆம் திகதி சனிக்கிழமை கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. அண்மையில் நடைபெற்ற கற்கை நெறிகளுக்குரிய இணைப்பாளர்களின் கூட்டத்தில் இத் தீர்மானம் எடுக்கப்பட்டது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (1-202)

இரவு வேளைகளில் தினமும் தடைப்படும் 'டயலொக்' சேவை

யாழ்ப்பாணம்,ஜன.27

கடந்த சில நாள்களாக டயலொக் கைத்தொலைபேசிச் சேவை அடிக்கடி தடைப்படுகின்றது. இதனால் பாவனையாளர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு ஆளாகின்றனர்.

தொடர்ந்தும் சில தினங்கள் இரவு 10 மணி தொடக்கம் காலை 6 மணிவரை தொலைபேசிச் சேவை செயலிழந்து காணப்பட்டது. ஆயினும் கடந்த 2 தினங்களாகப் பகல் வேளையிலும் டயலொக் சேவை தடைப்படுகின்றது.

இச் சீரற்ற சேவையால் அவசர தேவைகளை நிறைவேற்றுவதற்கு பெரும் சிரமப்படுவதாக மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

குறிப்பாக அசாதாரண சூழ்நிலை நிலவிவரும் இக்காலத்தில் தொலைபேசித் தடையால் இரவு வேளையில் அம்புலன்ஸ் சேவை மற்றும் அவசரகால உதவிகளைப் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளதாகப் பொதுமக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (அ-1-202)

கரையோரப் பிரதேசங்களில் வீழ்ந்து வெடித்த ஷெல்கள்

யாழ்ப்பாணம்,ஜன.27

யாழ். நகரக் கரையோரப் பிரதேசத்தில் கடந்த சில தினங்களாகக் கேட்கும் துப்பாக்கி வேட்டுச் சத்தங்களாலும், ஷெல் வீச்சுக்களிலிருந்து கிளம்பும் சத்தங்களாலும் மக்கள் நாளாந்தம் பீதி அடைகின்றனர்.

இதற்கிடையில் -

கொழும்புத்துறை, வளன்புரம் ஆகிய பிரதேசங்களில் வியாழக்கிழமை மாலை ஷெல்கள் வீழ்ந்து வெடித்ததால் மக்கள் பலரும் இடம் பெயர்ந்தனர்.

இரவு 6.30 மணியளவில் நிலைமை வழமைக்குத் திரும்பியதையடுத்து அவர்கள் வீடுகளுக்குத் திரும்பினர்.

(1-202)

பெண்ணை ஏமாற்றிப் பணம் வசூலித்த போலிச்சாமியார்கள் நையப்புடைக்கப்பட்டனர்

வடமராட்சியில் சம்பவம்

தனியாக வீட்டில் இருந்த பெண்ணிடம்கடவுள்பெயரைக்கூறி ஏமாற்றி ஒரு தொகைப் பணத்தை அபகரித்த போலிச் சாமியார்கள் இருவர் அவ்வூர் மக்களால் பிடித்து நையப்புடைக்கப்பட்டனர்.

பருத்தித்துறை ஆத்தியடிப் பகுதியில் கடந்தவாரம் இந்த ஏமாற்றுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவ தினத்தன்று குறிப்பிட்ட வீட்டுக்குச் சென்ற இரண்டு போலிச்சாமியார்கள், அங்கு இருந்த பெண்ணிடம் நயினை நாகபூசணி அம்மனின் குறைபாடு உள்ளதாகவும் அதற்கான பரிகாரங்களைத் தாம் செய்வதாகவும் கூறி அவரிடமிருந்து 5 ஆயிரத்து 500 ரூபா பணத்தை வாங்கிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவத்தையடுத்து மீண்டும் ஒருதடவை பஸ்தரிப்பிடம் ஒன்றில் அதே பெண்ணிடம் அவர்கள் அதே பாணியில் கைவரிசை காட்ட முற்பட்டபோது அப்பெண் சாதுரியமாகச் செயற்பட்டு உறவினர்களிடம் விடயத்தைத் தெரிவித்தார். உறவினர் சம்பந்தப்பட்ட இருவரையும் மடக்கிப் பிடித்து நையப்புடைத்ததாகத் தெரிவிக்கப்பட்டது.(1-203-15)

உண்மையை உணர்ந்து செயற்படுங்கள்; மக்கள், மாணவருக்கு படையினர் வேண்டுதல்

கடந்த புதன்கிழமை நடைபெற்ற

யாழ்ப்பாணம்,ஜன.27

சாவகச்சேரியிலும் மானிப்பாயிலும் நடத்தப்பட்ட கிளைமோர்த் தாக்குதல்களில் பொது மக்கள் கொல்லப்பட்டனர்; மாணவர்கள் காயமுற்றனர்.

விடுதலை விரும்பிகள் எனக் கூறிக்கொள்ளும் புலிகளின் இலக்கு அப்பாவி மக்களா?

மக்களும் மாணவர்களும் உண்மை என்ன என்பதை உணர்ந்து இவ்வாறான செயல்களுக்கு உடந்தையாக இருக்கவேண்டாம் - என்று கேட்டுக்கொள்ளும் அறிக்கை ஒன்றை யாழ்ப்பாணம் 51 ஆவது படைப்பிரிவு வெளியிட்டுள்ளது.

விடுதலைப் புலி உறுப்பினர்களின் பாதகச் செயல்களால் குடாநாட்டில் பொதுமக்களின் உயிர்கள் பலிகொள்ளப்படுவதாகவும் அதனால் மக்கள் சொல்லொண்ணாக் கஷ்டங்களை அனுபவிப்பதாகவும் அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

தமக்கு எதிரானவர்களைக் கொன்றுவிட்டு, துரோகிகளுக்கு மரண தண்டனை வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கிறார்கள்; துண்டுப் பிரசுரத்தை விட்டுச் செல்கிறார்கள்.

கடந்த புதன்கிழமை நடந்த கிளைமோர் சம்பவங்களில் மாணவர்களும் காயமுற்றனர். எனினும், அதற்கு மாணவர் தரப்பில் எவ்வித கண்டனமும் தெரிவிக்கப்படவில்லை. ஆனால், சிறு விடயத்துக்கு எல்லாம் மாணவர்களைத் தூண்டிவிட்டு பகிஷ்கரிப்பு என்ற போர்வையில் கல்விச் செயற்பாடுகளைச் சீரழிக்கின்றனர் - என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சிப் பாடசாலைகளில் 5ஆவது நாளாகப் பகிஷ்கரிப்பு

வடமராட்சிப் பிரதேச பாடசாலை மாணவர்கள் 5ஆவது நாளாக நேற்றும் பாடசாலைப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

காணாமற்போன ஹாட்லிக் கல்லூரி மற்றும் வேலாயுதம் ம.வி. மாணவர்கள் இருவரையும் விடுவிக்கக் கோரி கடந்த திங்கட்கிழமை தொடக்கம் வடமராட்சிப் பிரதேச மாணவர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (1-15-78-115)

அரசு - எதிரணிப் பிரமுகர்கள்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசு பிடிவாதம் பிடிக்கும் சூழ்நிலையில் -

பல கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை இழந்துள்ள அண்மைக் காலச் சூழலில் தங்களின் உறுதியான போக்கில் தளர்வுக் காட்ட முடியாது என விடுதலைப் புலிகளும் அடம் பிடிக்கும் நிலைமையில் -

இப்பிரசாரத்துடன் சம்பந்தப்பட்ட அமெரிக்காவோ, 25 ஐரோப்பிய நாடுகளைக் கொண்ட ஐரோப்பிய யூனியனோ, ஜப்பானோ அல்லது அமைதி முயற்சிகளுக்கு அனுசரணைக்காரர்களான நோர்வேயோ இப்பிரசாரத்தில் இதற்கு மேலும் எதுவும் செய்ய முடியாது என்று சர்வதேச அவதானிகள் குறிப்பிடுகின்றனர்.

புதுடில்லிக்கு விஜயம் செய்யும் இலங்கைப் பிரதமரும், எதிர்க்கட்சித் தலைவரும் இவ்விடயத்தில் தங்களின் கருத்துகளையும், நிலைப்பாடுகளையும் புதுடில்லி அரசுக்கு எடுத்துரைப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதேசமயம், ஈழத்தமிழர் பிரதேசங்களுக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படுவதை - பரவலாக்கப்படுவதை - புதுடில்லித் தலைவர்கள் மீண்டும் வற்புறுத்துவார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேவேளை, புலிகளை அடக்குகின்றோம் என்று கூறிக் கொண்டு முன்னெடுக்கப்படும் இராணுவ நடவடிக்கைகளின் போது அப்பாவிப் பொதுமக்கள் பாதிப்புக்கு உள்ளாக்கப்படுவது சகித்துக்கொள்ளப்பட முடியாதது என்பதையும் புதுடில்லி முக்கியமாக இந்த இரு இலங்கைத் தலைவர்களிடமும் வலியுறுத்தும் என்றும் கூறப்படுகின்றது.

இனப்பிரச்சினை தொடர்பான விடயத்தினால் கொழும்புக்கும் புதுடில்லிக்கும் இடையிலான முரண்பாடு அதிகரித்திருந்தாலும், இரு தரப்புகளுக்கும் இடையிலான தந்திரோபாய நட்புறவில் அது பெரிய பாதிப்பு எதையும் ஏற்படுத்தாது. ஏனெனில், அவ்வாறு நட்புறவில் பாதிப்பு ஏற்படுவது வெளியாகினால் - குறிப்பாக பாகிஸ்தானினால் - மேலும் மோசமாகக்கப்பட்டு விடும் என்ற உள்ளார்ந்தத்தை இந்தியா உணர்ந்திருக்கிறது.

எனினும், ஈழத்தமிழர்களுக்கு - அவர்களுக்கு உரியதை வழங்க வேண்டும் என்றே புதுடில்லியில் அனைத்துத் தரப்பினரும் கருதுகிறார்கள். இராணுவத் தீர்வை எவரும் வரவேற்கவில்லை.

அத்தோடு-

தமக்குள்ள அரசியல் நெருக்கடிகள், ஸ்திரமின்மையால் எழுந்துள்ள ஆபத்து ஆகியவற்றைத் தாண்டி பலதரப்பினாலும் ஏற்றுக் கொள்ளப்படும் - விசாலமான - அதிகாரப் பகிர்வுத் திட்டத்தை என்றோ ஒருநாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கொண்டு வருவார் என்ற நம்பிக்கை இந்திய அதிகாரவர்க்கத்தில் ஒரு பிரிவினரிடம் இன்னும் உள்ளது.

- இவ்வாறு இலங்கைத் தலைவர்கள் புதுடில்லி வருகையை யொட்டிய தமது மதிப்பீட்டில் இந்திய செய்தி வட்டாரங்கள் குறிப்பிட்டிருக்கின்றன. (உ)

இலசவ மருத்துவமுகாம்

இணுவில் லயன்ஸ் கழகத்தினின் ஏற்பாட்டில் இலவச மருத்துவமுகாம் நாளை காலை 9 மணிமுதல் 12 மணிவரை இணுவில் 7ஆம் கட்டைக் கிராம சேவையாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இம்மருத்துவ முகாமில் வைத்திய நிபுணர்களால் சிகிச்சை வழங்கப்படவுள்ளதாகவும், நீரிழிவு பரிசோதனையும் நடைபெறவுள்ளதாகவும் இணுவில் லயன்ஸ் கழகத் தலைவர் தெரிவித்தார். (1-வ)

நாளை

தை - 14
ஞாயிற்றுக்கிழமை
28.01.2007
திதி: தசமி
பிற்பகல் : 02.52
நட்சத்திரம் : கார்த்திகை
காலை: 07.49 வரை
சுபநேரம் : 09.36 - 11.06
ராகுகாலம்: 05.06 - 06.36

குடாநாட்டின் குட்டிச் செய்திகள்

காணாமற் போனவர் சடலமாக மீட்பு

கடந்த திங்கட்கிழமை தொடக்கம் காணாமற் போன இரு பிள்ளைகளின் தந்தை ஒருவர் நேற்றுக் காலை கழுத்து வெட்டப்பட்ட நிலையில் சுழிபுரத்தில் சடலமக மீட்கப்பட்டார்.

மானிப்பாய், கட்டுடையைச் சேர்ந்த கட்டட ஒப்பந்தகாரரான வீரசிங்கம் இரட்ணசிங்கம் (வயது 32) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

சுழிபுரம், கம்பனை அம்மன் கோயிலுக்கு அண்மையில் சடலம் மீட்கப்பட்டது.

மல்லாகம் நீதிவான் திருமதி ச.இளங்கோவன் சம்பவ இடத்தில் விசாரணை நடத்தினார்.

விசாரணைகளை அடுத்து சடலத்தை பிரேத பரிசோதனையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி உத்தரவிட்டார். (1-78-15-202)

கரவெட்டி இளைஞன் வியாழனன்று சரண்

கரவெட்டியைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் உயிர் அச்சுறுத்தல் காரணமாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் சரணடைந்தார்.

யாழ். நீதிமன்றத்தின் பணிப்பின் பேரில் இவர் இப்போது பாதுகாப்பின் பொருட்டு யாழ். சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ளார்.

பிரஸ்தாப இளைஞன் இனந்தெரியாதவர்களின் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்தவர் என்று தெரிவிக்கப்பட்டது. (1-4-79)

மினிபஸ்சேவை நிறுத்தம்; பிரயாணிகள் பாதிப்பு

யாழ். நகருக்கும் மாதகலுக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் 787ஆம் இலக்க மினி பஸ் சேவை பண்டத்தரிப்புடன் நிறுத்தப்பட்டுள்ளதால், மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாக மாதகல் பயணிகள் போக்குவரத்துச் சங்கம் தெரிவித்துள்ளது.

யாழ். அரச அதிபருக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றிலேயே அச்சங்கம் இதைச் சுட்டிக்காட்டியுள்ளது.

இச்சேவை இடைநிறுத்தப்பட்டதால் நோயாளிகள், பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியுள்ளதாக அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-1)

தேங்காய் திருட மரத்தில் ஏறியவர் வீழ்ந்து மரணம்

மானிப்பாய், உச்சியோடைப் பகுதியில் நள்ளிரவு நேரம் களவாக தேங்காய் பிடுங்குவதற்காக ஏறியவர் என்று சொல்லப்படும் ஒருவர் மரத்தில் இருந்து வீழ்ந்து மரணமானார்.

அதேஇடத்தைச் சேர்ந்த 33 வயதானவரே மரணமானவராவார்.

இந்த மரணம் குறித்து பதில் நீதிவான் எஸ்.வசந்தசேனன் விசாரணைகளை நடத்தினார். (1)

திட்டமிடல் சேவை பரீட்சை பிற்போடப்பட்டது

இன்றும் நாளையும் கொழும்பில் நடைபெறவிருந்த இலங்கை திட்டமிடல் சேவை தரம் II போட்டிப் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது என பரீட்சைத்திணைக்களம் அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களின் பரீட்சார்த்திகள் எதிர்நோக்கும் போக்குவரத்துப் பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு இப் பரீட்சை காலவரையின்றி பிற்போடப்பட்டதாக பரீட்சை ஆணையாளர் தெரிவித்தார். (1-4)

பொலிஸ் நிலையத்தில் இன்று பொருள் விற்பனை

யாழ். பொலிஸ் நிலையத்தில் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு பொதுமக்களுக்கு உணவுப் பொருள்கள் விற்பனை செய்யப்படவுள்ளதாக நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

தேங்காய்ப் பால்மா, கருவாடு, செத்தல் மிளகாய், நூடில்ஸ், சர்க்கரை, சீனி, குத்தரிசி ஆகிய பொருள்கள் விற்பனை செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (1-202)

முருங்கன்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தது. கொல்லப்பட்ட மூவரில் ஒருவர் பொலிஸ் உத்தியோகத்தர், அடுத்தவர் இராணுவச் சிப்பாய், மூன்றாவது நபர் ஒரு சிவிலியன் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மன்னாரிலிருந்து வவுனியா வீதி வழியே கொழும்பு நோக்கி வந்த தனியார் பஸ் வண்டியே தாக்குதலில் சிக்கியது.

பஸ்ஸை நோக்கி வேட்டுகள் தீர்க்கப் பட்டதையடுத்து பயணிகள் அலறியடித்துக்கொண்டு வெளியேறி ஓடினர் என்றும் கூறப்படுகிறது.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த சிவி லியன்களான ஒரு பெண்ணும், இளை ஞரும் முருங்கன் மாவட்ட மருத்துவ மனைக்குக் கொண்டுசெல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவத் தையடுத்து மன் னார் - மதவாச்சி வீதியில் சுமார் இரண்டு மணி நேரம் போக்குவரத்து தடைப்பட்டிருந்தது.

குடாநாட்டு மக்களின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வசியப் பொருள்கள் அரச களஞ்சியங்களில் வழங்கப்படும் அளவைப் பொறுத்து மக்களுக்கு வழங்கப்படுகின்றன. கறுப்புச் சந்தையில் பொருள்கள் பன் மடங்கு அதிகமான விலையில் விற்கப்படுகின்றன. ப.நோ.கூ. சங்கங்கள், பொலீஸ் நிலையங்கள் மற்றும் இராணுவத்தினரின் விற்பனை நிலையங்கள் ஆகியவற்றுக்கு முன்னால் பொருள்களைப் பெறுவதற்கு திரளும் மக்களைப் பார்த்தால் குடாநாட்டு மக்களின் கஷ்டம் விளங்கும்.

பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், இளைஞர்கள் வீதியில் நடமாடப் பயப்படுகின்றார்கள். கொலை, கொள்ளை, கடத்தல், கைது, காணாமற் போதல் போன்ற வன்செயல்கள் தொடர்ந்தும் அதிகரித்தவண்ணமுள் ளன. இறுக்கமான பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு மத்தியிலும் இரவில் இனந்தெரியாத குழுக்கள் சுதந்திரமாக நடமாடுகின்றன.

உயிர் அச்சத்தால் வெளியேற்றம்

இதன் காரணமாக மக்கள் தமது உயிரைப் பாதுகாத்துக் கொள்வதற்கு யாழ்ப்பாணத்தை விட்டு விரைவில் வெளியேறிவிட வேண்டும் என்ற மனநிலையில் உள்ளனர். சிலர் வெளியேறிவருகின்றனர். உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டதால் சிலர் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் சரணடைந்துள்ளனர் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-8)

தெற்கில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டது

கொழும்பு, ஜன.27

தென்மாகாணத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகள் நேற்றிலிருந்து மேலும் பலப்படுத்தப் பட்டுள்ளதாக தெற்குப் பிராந்திய பிரதி பொலிஸ்மா அதிபர் ஜயந்த கமகே தெரிவித்தார்.

புவியியல் 2009
N A V A L A R
K.அனோஜன்
ஆனைப்பந்தி sat., sun. 8-9
திருநெல்வேலி
Mon., Wed. 3-4
2008, 2007 DAY CLASS
நடைபெறுகின்றன
N.C.A.(இறுதியில்)
2009 ஆரம்பம்
Sat., Sun. - 10 - 11

நாவலர் அக்கடமி
ஆனைப்பந்தி
இணைந்த கணிதம்
B.மயூரன்
A/L 2007
வட்டம்
Sat, Sun, 3p.m, Tue 4p.m.
A/L 2008
சமனிலிகள்
Wad, Sat, Sun 4p.m.
A/L 2009
அடிப்படைக் கணிதம்
Tue., Thu. 3p.m.

திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விய வருஷம் தைமாதம் 14ஆம் நாள் நாளை(28.01.2007) ஞாயிற்றுக்கிழமை பகல் 9.35 மணி முதல் 10.38 மணிவரையுள்ள மீன லக்கினமும் சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த சுபவேளையில்

எமது கனிஷ்டபுத்திரன்
திருநிறை செல்வன்
சுரேஸ்குமார்
அவர்களுக்கும்

எமது கனிஷ்டபுத்திரி
திருநிறை செல்வி
ஜெயமதி
அவர்களுக்கும்

திருவருள் துணைகொண்டு மணமகள் இல்லத்தில் திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து அதைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துசிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் இனிய நல்வரவை நாடும்

திரு. ஆ.கோவிந்தராஜா
குடும்பம்
சோமசுந்தரம் வீதி,
ஆனைக்கோட்டை.

திருமதி வி.முத்துக்குமாரசாமி
குடும்பம்
சோமசுந்தரம் வீதி,
ஆனைக்கோட்டை.

இரு வீட்டார் அழைப்பு (57555)

இலங்கை மின்சார சபை - யாழ். பிரதேசம்

மின் தடை பற்றிய அறிவித்தல்

27.01.2007 சனிக்கிழமை(இன்று) காலை 8.30 மணிமுதல் மாலை 4.30 மணிவரை யாழ்.குடாநாடு முழுவதும் அவசர திருத்த வேலை காரணமாக மின்சார விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்பதை மின் பாவனையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு முன்பும் மின்சாரம் வழங்கப்படலாம் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

இதனால் மின்பாவனையார்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகின்றோம்.

பிரதேச மின்பொறியியலாளர்
இலங்கை மின்சார சபை, யாழ்.பிரதேச அலுவலகம், சுன்னாகம்.

"சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்குக் கைகொடுக்கும்" இலங்கை மின்சார சபை

(சி/51930)

மூன்றாம் ஆண்டு நினைவு | 31ஆம் நாள் நினைவு | 11ஆம் ஆண்டு

அமரர் மயில்வாகனம் மாணிக்கத்தியாகராசா
மலர்வு: 17.07.1923
உதிர்வு: 27.02.2004
திதி: சப்தமி

அமரர் மாணிக்கத்தியாகராசா கனகம்மா
மலர்வு: 02.06.1925
உதிர்வு: 28.12.2006
திதி: நவமி

அமரர் ஸ்ரீ ராஜன் சுதாநிதி
மலர்வு: 14.11.1970
உதிர்வு: 26.02.1996
திதி: சஷ்டி

அன்னார்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (27.01.2007) சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெற உள்ளது. அந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொண்டு அன்னார்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அனைவரையும் அழைக்கிறோம்.

கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம். (57500)

திருமதி M. வசந்தா (மகள் - சித்தி)

சபிண்டீகரண அழைப்பு

மலர்வு
15.06.1938
உதிர்வு
28.12.2006

அமரர் நாகர் பத்மநாதன்

(ஆசாரி - சின்னக்கண்டு)

அன்பின் திருவுருவே
எம்மை வாழ வைத்த அப்பாவே!

இன்று நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன விருந்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சோமசுந்தர புலவர் வீதி,
நவாலி. (57556)

- குடும்பத்தினர்.

31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

கிருஷ்ணபிள்ளை கண்மணிப்பிள்ளை

(தில்லையம்மா)

மண்ணின் மடியில்: *26.03.1926*
ஆண்டவன் அடியில்: *28.12.2006*
திதி: அட்டமி

இன்று (27.01.2007)சனிக்கிழமை அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு எமது இல்லத்தில் நடைபெற உள்ளது. அந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் கலந்துகொண்டு அவரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
கி.பத்மநாதன் (மகன்),
த.தவமணிதேவி (மணி - மகள்)

92, பழம்வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். (57497)

வெளிவந்து விட்டது

சகஸ்ர அஷ்டோத்திரசத, திரிசதி
நாமங்கள் அடங்கிய
மஹாமாரி அம்பாள் அர்ச்சனை மலர்
கிடைக்கும் இடங்கள்
சிவஸ்ரீ து.விவேகானந்தக்குருக்கள்
யாழ்.கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர்
ஆலய பிரதம குரு

சிவஸ்ரீ வே.பாலச்சந்திரக் குருக்கள்
வல்வெட்டி வேவில் ஸ்ரீ வீரகத்தி
விக்னேஸ்வரர் ஆலயபிரதமகுரு

கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவனத்தில் கடமையாற்றும்
சி.சிவராஜசிங்கம் அவர்களின் அன்புத் தாய்
இராசம்மா சிவசாமி

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அலுவலர்கள்,
ஐக்கியநாடுகள் அபிவிருத்தித்திட்டம் (UNDP)
யாழ்ப்பாணம்.

(57557)

மரண அறிவித்தல்கள்

கைலாசபிள்ளை கனகலிங்கம்(மஞ்சுர்பான்)

மண்கும்பான், 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்காலிகமாக தபால் கந்தோர் ஒழுங்கை, சோனகர் தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட கைலாசபிள்ளை கனகலிங்கம் நேற்று (26.01.2007)வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கைலாசபிள்ளை -பூரணம் தம்பதியரின் மகனும் காலஞ் சென்ற நகேந்திரம் மற்றும் வள்ளியம்மை தம்பதியரின் மருமகனும் புஸ்பராணியின் கணவரும் பிரதீபன், பிரபாஜினி,ஜெகதீபன், பிரியா, கஜீந்தன், மேனகா ஆகியோரின் அன்புத் தந்தையும் சதீஸ்பாமா, ஸ்ரீரெங்கநாதன் (பிரான்ஸ்), ரவிவர்மன் (போட்டோ ரவி) ஆகியோரின் அன்பு மாமனும் தனுஷிகா, வோசிகன், கிரிஷன், சௌமியா, ஐஸ்வினி ஆகியோரின் பேரனும் கணேசையா, கனகசுந்தரம், கெங்காதேவி, யோகேஸ்வரி,காலஞ்சென்றவர்களான கருணாகரன், தயாநிதி மற்றும் கருணாநிதி (கண்ணன்), கனகநாயகம் (குஞ்சன்) ஆகியோரின் சகோதரரும் சிவபாதசுந்தரம், செல்வராணி, காலஞ் சென்ற தனபாலசிங்கம், பரமலிங்கம், சர்வேஸ்வரி, திலகேஸ்வரி, ஜெயபாலசுந்தரம், காலஞ்சென்ற வரதராஜன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(28.01.2007)ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தபால் கந்தோர் ஒழுங்கை,
சோனகர் தெரு, யாழ்ப்பாணம்.
☎ ர.பே.: 0776 153646 (57561)

தகவல்:
குடும்பத்தினர்.

சுப்பிரமணியக்குருக்கள் சிவானந்தராசா

வியாபாரிமூலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியக்குருக்கள் சிவானந்தராசா (ஐயர்) 25.01.2007 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சுப்பிரமணியக்குருக்கள் - மனோன்மணிஅம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் கமலாஜினியின் அன்புக் கணவரும் அச்சுதன்(யா/ நெல்லியடி மத்தி மகா வித்தியாலயம், 2007O/L), வித்தகன் (யா/ தம்பசிட்டி மெ.மி.த.க. பாடசாலை), சகானா (யா/ வட இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ரஞ்சினியின் சிறியதந்தையும் பாலச்சந்திரா(அயர்லாந்து), சச்சிதானந்தராசா (கனடா), தயானந்தராசா (கனடா), அருளானந்தராசா(பிரான்ஸ்), ஜெயானந்தராசா (கனடா), ரவிச்சந்திரன்(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் தெல்லிப்பழை குரும்பசிட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற கெணசாமிக்குருக்கள் . ஞானப்பூங்கோதையின் அன்பு மருமகனும் கிருஷ்ணானந்தமூர்த்தி (அயர்லாந்து), சந்திரகலா(கனடா), பார்வதி(கனடா), மதி(பிரான்ஸ்), சாரு லதா (கனடா), சுமதி(கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஐஸ்வரியா, சிம்ரான், விஜய், டாரின், லவண்யா, டேவிட், அபிநயன், அனுஷன், மாதினி (கனடா), திவாகரி, மேனுஜா, நிருஷன், நிதர்ஷன் (பிரான்ஸ்) ஆகியோரின் பெரியப்பாவும் அனூரின், அடீபான் (அயர்லாந்து) ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (27.01.2007) சனிக்கிழமை மு.ப.10 மணிக்கு நடை பெற்று, சுப்பர்மடம் இந்துமயானத்தில் பூதவுடல் தகனஞ்செய்யப்படும்.

சகானா கொமினிக்கேசன்.
021 226 3434 (சி-51929)

தகவல்:
சுப்பிரமணியக்குருக்கள்
(அஞ்சன் ஐயா) குடும்பம்.

மரண அறிவித்தல்கள்

தம்பு இராசேந்திரம்

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு இராசேந்திரம் 25.01.2007 வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி தம்புவின் மகனும் காலஞ்சென்ற எம்பிலியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற ஜெயதேவி, ஜெயராஜா, ரட்ணதேவி (பிரான்ஸ்), இரட்ணராஜா(பிரான்ஸ்), அருள்ராஜா (பிரான்ஸ்), தங்கதேவி (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை கொழும்பில் இன்று(27.01.2007) சனிக்கிழமை நடைபெறும். அதேநேரம் வட்டுக்கோட்டையில் அமைந்துள்ள அவரது இல்லத்திலும் ஜெபஆராதனை பி.ப. 2.30 மணியளவில் நடைபெறும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வட்டுக்கோட்டை. (57559)

தகவல்:
தங்கதேவி (மகள்).

சின்னத்துரை இராஜகுலசிங்கம்

சுன்னாகம் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை இராஜகுலசிங்கம் (இராசகுஞ்சு) 25.01.2007 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை-பொன்னம்மா தம்பதியரின் மகனும் மல்லிகாதேவியின் பாசமிகு கணவரும் துரைசிங்கம் -செல்லம்மா தம்பதியரின் மருமகனும் கேதீஸ்வரன் (லண்டன்), விவிதா, கவிதா(சிவன் முன்பள்ளி ஆசிரியை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் குமாரகுலசிங்கம், சந்திராதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவமைந்தனின் (மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்)மாமனும் சிவநிஜனின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(27.01.2007) சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.

தகவல்:
மல்லிகாதேவி (மனைவி).

மரண அறிவித்தல்

திருமதி சுப்பையா பூமணி

உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா பூமணி நேற்று (26.01.2007)வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையாவின் மனைவியும் மாணிக்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர், அமெரிக்கன் மிஷன் பெ. பாடசாலை) இரத்தினசாமி (கனடா), யோகம்மா ஆகியோரின் அன்புத் தாயும் ஜெகநாதன் (ஓய்வுபெற்ற ஆசிரியர்,உடுப்பிட்டி ஆண்கள் உயர்தரப் பாடசாலை),அம்பிகாதேவி (கனடா), நாகராசா ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.01.2007)சனிக்கிழமை நண்பகல்12 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

சந்தை வீதி,
உடுப்பிட்டி,
தொ.பே.: 226 4297

தகவல்:
இ.ஜெகநாதன்
(மருமகன்)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.01.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.